# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 14,513 –1965 සැප්තැම්බර් 24 වැනි සිකුරාදා — 1965.9.24**

14,513 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 24 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV—உள்ளூர் ஆட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]


| | பக்கம் |
|---|---|
| உள்ளூராட்சி அறிவிப்புகள் .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — |
| துணை விதிகள் .. .. .. | 123 |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | — |
| வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| வரவு செலவுத் திட்டங்கள் .. .. | — |
| ஆதன விற்பனைகள் .. .. | — |
| விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| நானாவிதம் .. .. .. | — |


## துணை விதிகள்

### சாவகச்சேரி நகர சங்கம்

#### நகர சபை கட்டளைச் சட்டம்

1952 ம் ஆண்டின 6 ம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்படியான (255 ம் அத்தியாயமான) நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 153 ம் பிரிவின் கீழ் சாவகச்சேரி நகர சபையால் ஆக்கப்பட்டு, 154 (1) ஆம் உட்பிரிவால் உள்ளூராட்சி அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக்கொண்டு அவரால் அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகள்.

நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சர்.

1965.9.8.

#### துணை விதிகள்

1. கீழ் காணப்படும் தொழில்கள் அபாயமான தொழில்களாகக் கருதப்படல் வேண்டும்.

(1) தும்பு தயாரிததல் அல்லது சேகரித்து வைத்தல்.
(2) கொப்பரு தயாரித்தல் அல்லது சேகரிதது வைத்தல்.
(3) ஆலை அல்லது செக்கு மூலம் தேங்காயெண்ணெய் தயாரித்தல்.
(4) தேங்காய்த் துருவல் தயாரித்தல்.
(5) பருத்தி, இலவம்பஞ்சு, அல்லது வைக்கோல் சேகரித்து வைத்தல்.
(6) நல்லெண்ணெய் தயாரித்தல்.
(7) தீப்பெட்டி தயாரித்தல்.
(8) அரிவு ஆலை வைத்திருத்தல்.
(9) தண்ணீர், நீராவி அல்லது இயந்திர உதவியை உபயோகிதது மரம் அரிதல்.
(10) பிரதான பாதையொன்றிலிருந்து நூறு யார் தூரத்திற்குள் கொட்டில் கட்டி அதில் கொப்பரு உலர விடுதல்.
(11) சாககுகள் சேகரித்து வைத்தல்.
(12) எண்ணெய் சேகரித்து வைத்தல்.
(13) கயிறு சேகரித்து வைத்தல் அல்லது கயிறு, தும்பு இவைகளால் தயாரித்த பொருட்கள் சேகரித்து வைத்தல்.
(14) மின்சார வேலைக்கூடம வைத்திருத்தல்.
(15) அச்சகம் வைத்திருத்தல்.
(16) ஆபரணங்கள் தயாரிப்பதற்கான வேலைத்தலம் வைததிருத்தல்.
(17) கொல்லுலை வைத்திருத்தல்.
(18) சலவைக்கூடம் வைத்திருத்தல்.
(19) தச்சுத் தொழிற்கூடம் வைத்திருத்தல்.

2. கீழ் காணபபடும் தொழில்கள் அருவருப்பான தொழில்களாகக் கருதப்படும்.

(1) தோல் பதனிடும் சாலை வைத்திருத்தல்.
(2) பாக்குப் பாடம்பண்ணல்.
(3) இரத்தம் அல்லது கழிவு இறைச்சி அவித்தல்.
(4) தென்னைமட்டை நனையப்போடுதலுக்கான தொட்டி வைத்தல்.
(5) (ஐந்து அந்தருக்கு மேற்பட்ட) மாசு மீன சேகரித்து வைத்தல்.
(6) (மூன்று அந்தருக்கு மேற்பட்ட) உப்புப் போட்டப்பட்ட மீன் வைத்திருத்தல்.
(7) (மூன்று அந்தருக்கு மேற்பட்ட) கருவாடு வைத்திருத்தல்.
(8) அரி குழி வைத்திருத்தல்.
(9) மீன் பாடம்பண்ணுதல், உலர வைத்தல் அல்லது ஐஸ் போடுதல்.
(10) இறைச்சி பாடம்பண்ணுதல் அல்லது உலர வைத்தல்.
(11) மிளகாய்த்தூள் தயாரித்தல்.
(12) பிறசுகள் தயாரித்தல்.
(13) இயந்திர மூலம் மிளகாய்த்தூள் அரைத்தல்.
(14) கரி எடுப்பதற்காக மரம் அல்லது சிரட்டை எரிததுக்கருககுதல.
(15) பத்திற்கு மேற்பட்ட ஆடுகள் அடைக்கும் கொட்டில் அல்லது பட்டி வைத்திருத்தல்.
(16) அரிசி, கோதுமை, குரக்கன் அல்லது வேறு தானியங்கள் இயந்திர மூலம் அரைத்தல்.
(17) சுருட்டுச சுற்றுதல்.
(18) லோகத்திலுலான சேகரிக்கப்பட்ட பொருட்கள் சேகரித்து வைத்தல்.
(19) கரி சேகரித்து வைத்தல்.
(20) ரயர், ரியூப் திருத்தும் தொழிலகம் வைத்திருத்தல.
(21) (பனனிரண்டு கலனுக்கு மேற்பட்ட) அசெற்றித் திராவகம் சேகரித்து வைத்தல்.

3. கீழ் காணபபடும் தொழில்களை அபாயமும் அருவருப்பும் விளைவிக்கும் தொழில்களாகக் கருதப்படும்.

(1) செங்கல் அல்லது ஓடு உற்பத்தி செய்தல்.
(2) சுண்ணாம்பு சுடுதல் அல்லது பதனிடுதல்.
(3) எண்ணெய அல்லது மிருகக் கொழுப்பு உருக்குதல்.
(4) செங்கல், "கபுக்" முருகக்கல், ஓடு அல்லது உலோகங்கள் சேகரித்து வைத்தல்.
(5) ஐம்பது கலனுக்கு மேற்பட்ட தேங்காயெண்ணெய் சேகரித்து வைத்தல்.
(6) இயந்திர மூலம் கல் உடைத்தல்.

9–1098—24.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,513

## பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152 ஆம், 156 ஆம் பிரிவுகளின் கீழ் கந்தளாய் பட்டின சபையால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவால் அவருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரபலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 25.8.1965.

### துணை விதிகள்

### மலகூட வேலை

1. சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமத்துணை விதிகளின் 19 ஆம் பாகத்து 6 ஆம் துணைவிதியின் நோக்கங்களுக்கு, சபைக்கு மாதந் தோறும் கொடுக்க வேண்டிய மலகூட வேலைக்கட்டணம், சுத்தம் செய்யப்படும் வாளி ஒவ்வொன்றுக்கும் ஒரு ரூபாய் ஐம்பது சத வீதமாகும்.

2. துணைவிதி 1 இல் சொல்லப்படும் கட்டணம், அக்கட்டணம் எந்த மாதத்துக்கு உரியதோ அதற்கடுத்த மாதம் பத்தாந் தேதியன்றோ அதற்கு முன்னரோ கொடுக்கப்படவேண்டும்.

9–1100—24.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,513

---

ඇල්.ජී.—ජී/18/63
ප.පා.කො.සිඩී/ටී/1/1/1

## பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152 ஆம், 156 ஆம் பிரிவுகளின் கீழ், கலேவெல பட்டின சபையால் ஆக்கப்பட்டு, உள்ளூராட்சி அமைச்சருக்கு அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆம் பிரிவால் உரித்தாக்கப்பட்ட அதிகாரபலத்தைக் கொண்டு, அவரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

ஏ. ஈ. கொகர்லி மொறகொட,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு, 8.9.1965.

### துணை விதிகள்

### மலகூட வேலை

1. சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமத்துணைவிதிகளின் 19 ஆம் பாகத்து 6 ஆம் துணைவிதியின் நோக்கங்களுக்காக, மாதந்தோறும் சபைக்கு கொடுபடவேண்டிய மலகூட வேலைக்கட்டணம், சுத்தம் செய்யப் படும் வாளி ஒவ்வொன்றுக்கும் இரண்டு ரூபாய் வீதமானதாயிருக்கும்.

2. துணைவிதி 1 இல் சொல்லப்படும் கட்டணம், எந்த மாதத்துக்கு அக்கட்டணம் உரியதோ அதற்கு அடுத்த மாதம் பத்தாந் தேதி அல்லது அதற்கு முன்னர் கொடுக்கப்படவேண்டும்.

9–1105—24.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,513

---

## பருத்தித்துறை நகர சபை

### நகர சபைகள் கட்டளைச் சட்டம்

(255 ம் அத்தியாயமான) நகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 153 ம், 156 ம் பிரிவுகளின் கீழ் பருத்தித்துறை நகரசபையால் ஆக்கப்பட்டு, அக்கட்டளைச் சட்டத்தின் 154 ம் பிரிவின் உள்ளூராட்சி அமைச்சருக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களின் பலத்தைக் கொண்டு, அவரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள.

நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு 1,
1965 ம் ஆண்டு செப்டம்பர் மீ 8 ந உ.

### துணைவிதிகள்

1. கீழ்க்காணும் தொழில்கள் அபாயமான தொழில்களாகக் கருதப் படவேண்டும்.

(1) தும்பு ஆக்கல், அல்லது சேகரித்து வைத்தல்.
(2) கொப்பரா ஆக்கல், அல்லது சேகரித்து வைத்தல்.
(3) எந்திரம் உபயோகித்து தேங்காய் எண்ணெய் ஊற்றுதல்.
(4) உலர்த்திய தேங்காய்த்திருவல் செய்தல்.
(5) காட்சிப் பெட்டி வைத்து ஆபரணங்கள் செய்யும் ஸ்தாபனம் வைத்தல்.
(6) அச்சகம் வைத்தல்.
(7) காட்சிப் பெட்டி வைத்துக் கொல் உலை அல்லது கொல் தொழில் ஸ்தாபனங்கள் வைத்தல்.
(8) வியாபாரத்திற்கு வைக்கோல் சேகரித்து வைத்தல்.
(9) வியாபாரத்திற்கு கோணிப் பைகள் வைத்திருத்தல்.
(10) ஐம்பது கலனுக்கு மேற்பட்ட வியாபாரத்திற்கு தேங்காய் எண்ணெய் வைத்திருத்தல்.
(11) அரிசி ஆலை, அல்லது நெல் குற்றும் ஆலை வைத்திருத்தல்.
(12) இருபத்தைந்து கலனுக்கு மேற்பட்ட வியாபரத்திற்கு மண் ணெண்ணெய் வைத்திருத்தல்.
(13) பழுதுபார்க்க அல்லது சேவிஸ் செய்ய மோட்டார் கரேஜ் வைத்திருத்தல்.
(14) காட்சிப் பெட்டி வைத்து தச்சு தொழிற் சாலையொன்றுக்கான ஸ்தாபனம் வைத்தல்.
(15) துவிச்சக்கரவண்டி பழுதுபார்க்கும் ஸ்தாபனம் வைத்திருத்தல்.
(16) செக்குமூலம் தேங்காய் எண்ணெய் ஊற்றுதல்.
(17) செக்குமூலம் நல்லெண்ணெய் ஊற்றுதல்.
(18) மின்சாரத் தொழிற்சாலை வைத்திருத்தல்.
(19) வியாபாரத்திற்கெனக் கிடுகு சேகரித்து வைத்திருத்தல்.
(20) பிராணவாயு உபயோகிக்கப்படும் கரேஜ் வைத்திருத்தல்.
(21) வியாபாரத்திற்கென வெட்டுமரம் சேகரித்து வைத்திருத்தல்.
(22) வாயுப்பாணங்கள் ஆக்கும் தொழிற்சாலை வைத்திருத்தல்.
(23) வியாபாரத்திற்கென விறகு சேகரித்து வைத்திருத்தல்.
(24) "பற்றறி" சார்ச் பண்ணுதல்.
(25) எந்திரம் உபயோகிக்கப்படும் அரிகிடங்கு வைத்திருத்தல்.
(26) எந்திரம் உபயோகிக்கப்படாத அரிகிடங்கு வைத்திருத்தல்.
(27) ரயர், ரியூப் வல்கனைஸ் செய்யும் ஸ்தாபனம் வைத்திருத்தல்.
(28) பெற்றோலும் மண்ணெண்ணெயும் அல்லது பெற்றோல் அல்லது மண்ணெண்ணெயும் விற்கப்படும் கடை வைத்தல்.

2. கீழ்க்காணப்படும் தொழில்கள் அருவருப்பு விளைவிப்பனவாகக் கருதப்படல் வேண்டும்.

(1) செயற்கை முறைப் பசளை செய்தல்.
(2) இரத்தம் அல்லது கழிவு இறைச்சி அவித்தல்.
(3) கொழுப்புச் செய்தல் அல்லது வடித்தல்.
(4) சவர்க்காரம் செய்தல்.
(5) தேங்காய் மட்டை ஊறப்போடுமிடம் வைத்திருத்தல்.
(6) விற்பனைக்கென மாசி சேகரித்துவைத்தல்.
(7) இரண்டு அந்தருக்கு மேற்பட மீன் சேகரித்து வைத்திருத்தலும் காயப்போடலும அல்லது சேகரித்துவைத்தல் அல்லது காயப்போடுதல்.
(8) பத்து அந்தருக்கு மேற்பட சுண்ணும்பு, தோல், எலும்புகள், செயற்கை உரம் அல்லது செயறகை உரம் செய்வதற்கு உபயோகிக்கப்படும் பொருட்கள் சேகரித்து வைத்தல்.
(9) மீனுக்குப் பனிக்கட்டி போடுதல்.
(10) பதினைந்து வெள்ளாடுகளுக்கு மேல் வைத்திருக்க சாலை அல்லது பட்டி வைத்திருத்தல்.
(11) எந்திர மூலம் கறிச்சாமான்கள் அரைத்தல்.
(12) பீடி செய்தல்.
(13) உலோகங்களால் செய்யப்பட்ட மீட்கப்பட்ட பொருள்கள் சேர்த்து வைக்குமிடம்.
(14) வியாபாரத்திற்கென கரி வைத்திருத்தல்.
(15) வியாபாரத்திற்கென உமி சேகரித்துவைத்தல்.
(16) அசெட்டித் திராவகம் நாலுகலனுக்கு மேல் வைத்திருத்தல்.
(17) சுருட்டுச் சுற்றுதல்.
(18) புகையிலை அல்லது சுருட்டு சேகரித்துவைத்தல்.
(19) இறைச்சிக்கடை வைத்திருத்தல்.
(20) பழக்கடை அல்லது காய்கறிக்கடை வைத்திருத்தல்.
(21) சலவைத் தொழிற்சாலை வைத்திருத்தல்.
(22) பாண் போறணை வைத்திருத்தல்.
(23) ஐஸ்கிறீம் செய்தல்.
(24) கோழித்தீன் அல்லது மிருகத்தீன் விற்கும் கடை வைத்திருத்தல்.

3. கீழ்க்காணும் தொழில்கள் அபாயமும் அருவருப்பும் விளைவிக்கும் தொழில்களாகக் கருதப்படவேண்டும்.

(1) செங்கல் அல்லது ஓடு செய்தல்.

(2) சுண்ணாம்புக் காளவாய் வைத்திருத்தல்.

(3) பானை சட்டி செய்தல்.

(4) செங்கல், கபுக்கல், ஓடு அல்லது சிறுகற்கள் சேகரித்துவைத்தல்.

(5) இயந்திரமூலம் கல் நொருக்குதல்.

(6) வெறும் போத்தல் வைத்திருத்தல்.

(7) பெயின்ற் அல்லது வாணிஷ் வைத்திருத்தல்.

(8) பலசரக்குச் சாமான்கள் வைத்திருத்தல்.

(9) இருபத்தைந்து பைக்கற்றிற்கு மேற்பட சீமெந்து வைத்திருத்தல.

(10) இருபதிற்கு மேற்பட்ட றப்பர், ரயர், ரீயூப் வைத்திருத்தல்.

(11) படம் பிடிக்கும் ஸ்ருடியோ வைத்திருத்தல்.

(12) வீட்டுத் தளபாடம் செய்தல் அல்லது வைத்திருத்தல்.

(13) இருபத்தைந்து பைக்கற்றிக்கு மேல் தானியம், சிறுதானியம் அல்லது மாவு வைத்திருத்தல்.

(14) ஐம்பது மூடைகளுக்கு மேல் நெல், மாவு, அரிசி வைத்திருத்தல்

(15) சிகையலங்காரக் கடை. வைத்திருத்தல்.

(16) சிரட்டை அல்லது நிலக் கரி எரித்தல்.

(17) தும்பு அல்லது தும்பால் செய்த பொருட்களை ஆக்கல் அல்லது சேகரித்து வைத்திருத்தல்.

(18) ரேடியோ திருத்தும் கடை வைத்திருத்தல்.

(19) மின்சார வயரிங் செய்தல்.

(20) தகர வேலை செய்தல்.

(21) மண்பாண்டம் சேகரித்து வைத்திருத்தல்.

9-1097—24.9.65 ந் திகதிய வர்த்தமானி இல. 14,513

---

வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.

அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.

---

இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.